# காஞ்சி

ஞாயிறுமலர்

விலை 20 காசு

17-9-67



# பிடி!

[ ஈ. எஸ். பட்டப்பா ]

மகாலட்சுமி ஒருமுறை உடலைச் சிலிர்த்தாள். அவளுடைய கோபமெல்லாம் சமுதாயத்தின்மீது இருந்தது.

'நான் பெரிய பணக்காரி — திடீரென்று பணத்தைக் கேவலமான வழிகளில் சேர்த்துவிட்டேனா? இல்லை. பெற்றோர்கட்கு ஒரே ஒரு மகள். ஏராளமான சொத்துகளை அவர்கள் எனக்கு வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவைகளை அனுபவிக்க இந்த ஒரு அழகிதானே!' தந்தப் பதுமையைப்போல மகாலட்சுமி அசைந்தவாறு கூறி சோபாவில் உட்கார்ந்தாள்.

'மகாலட்சுமி கூப்பிட்டாயா?'

'ஹலோ ஹஸ்பெண்ட், யூ ஷூட் பி அவுட் ஆப் திஸ் பிளேஸ் பார் சம் டேய்ஸ்!' என்றாள் மகாலட்சுமி.

'......மகாலட்சுமியின் கணவன் சுந்தரராஜன் மூடிக்கொண்டிருந்த வாயைத் திறவாமலேயே தலையை ஆட்டிவிட்டுப் பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு ஊருக்குக் கிளம்பினான். போகும்பொழுது கத்தையாக ஒரு பத்து ரூபாய்க் கட்டைக் கொடுத்து மகாலட்சுமி அவனை அனுப்பும்போது அவனுக்குக் கிடைத்த பரிசு 'இச்'சென்று ஒரு பெரிய சப்தம்.

சற்றுத் தொலைவில் குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. அது மகாலட்சுமியின் மகன்! அவனைக் கண்டதும் சுந்தரராஜனின் ஆண்மை அழ ஆரம்பித்துவிட்டது. ஏதோ ஒரு பாசத்தோடு அவனைத் தூக்கி அணைத்துக் கீழே விட்டு விட்டு. ராஜா போய் வருகிறேன்—பத்திரமாய் இருடா கண்ணு!' என்று கூறித் திரும்பிப் பார்க்காமல் சென்றுவிட்டான்.

குழந்தை அழகுநடை பயின்று மிகவும் ஜோராகச் சென்றான்.

மகாலட்சுமி ஆகாரத்தை முடித்துக்கொண்டு ரேடியோவைத் திருப்பிவிட்டு மிகவும் ஒய்யாரமாக படுத்தபடியே கேட்டுக்கொண்டிருந்தாள்.

இரவு வெகுநேரம் சென்றது.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.

ஒருமணி முப்பது நிமிடங்கள்!

"ஓ இன்று இல்லை! நாளை தான்!" என்று ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுத் தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலை அவளுடைய பெரிய கார் ஓட்டலின்முன் நின்றது.

விடுவிடென்று மாடிப்படி ஏறினாள்.

அவனைப் பார்த்தாள்.

"ஏன் நேற்று வரவில்லை!"

"ஓ ஐயாம் சாரி! உங்கள் ஹஸ்பெண்ட் இருப்பாரேன்னு!"

"அவருக்கு என்னை எதிர்க்கத் தெரியாதே!"

"ஐசி! அதாவது அவரையே..... நோ...நோ...ஐவில் கம் டுடே நைட் ......ஓகே!"

"கிளாட்!"

'அது சரி, டிபன் சாப்பிடுங்கள்"

'உம் வேண்டாம்!"

"மகாலட்சுமி பார்த்தீங்களா அதுதானே வேண்டாம் என்கிறேன்!" என்றான் அவன்.

"சரி வரவழியுங்கள்!"

மிகவும் அருமையான டிபன் வந்தது.

இருவரும் சாப்பிட்டனர்.

"சரி நான் விடைபெறட்டுமா?"

"சென்று வாருங்கள்!"

"இன்றைக்கு இரவு......"

'கண்டிப்பாக வருகிறேன்!" அந்த ஆணழகன் சொன்னபோது மகாலட்சுமி அவனை ஆரத் தழுவிவிட்டாள்!

அவன் பேசாமல் இருந்துவிட்டு, "இரவு வருகிறேன்!" என்றான்.

"சரி நீங்கள் ஆண்களில் சிறந்தவர்கள்! இதுதான் முதல் தடவை போல் இருக்கிறது!"

அவன் சிரித்தான்!

இரவு பத்து!

அவனுடைய பூட்சுகளின் ஒலி மகாலட்சுமியின் பங்களாப்படிகளில் கேட்டது.

"ஆ வந்துவிட்டீர்களா, இருங்கள் என்று சொல்லி, 'சாப்பாடு கொண்டுவா!" என்று அதிகாரம் செய்தாள்.

"வேண்டாம் நிறைய சாப்பிட்டுவிட்டேன்!"

'சரி, பழமும், பாலும் கொண்டுவா!" என்றாள்.

பழமும் பாலும் காலியாயின!

"மகாலட்சுமி"

"என்ன அன்பே!"

"உன்னை இன்று அனுபவிக்கக் கொடுத்துவைக்கவேண்டும். இந்த நெக்லஸ் உன் கழுத்துக்கு ஜோராக இருக்கும் இல்லையா?" என்றான்.

"அதிக விலைகொடுத்து இதை ஏன் வாங்கினீர்கள்? நான் பணக்காரி! அதை கழுத்தில் கட்டிக்கொண்டே மகாலட்சுமி சொன்னாள்.

"பணம்கூட கொண்டுவந்திருக்கிறேன். ஆயிரம் ரூபாய்!" என்று அவன் சொன்னபோது "பளீரென்று அவனை அடித்துவிட்டு, நான் சென்ஸ் திஸ் இஸ் பிளஷர், நாட் பார் மணி, ஐயாம் நாட் எ விச்!" என்றாள் மகாலட்சுமி.

"ஐ சீ! வெரி சாரி! வாட் அபௌட் நெக்லஸ்?"

"யூ......!"

'நான் போலீஸ் அதிகாரி, இதோ பார், நீ விளையாடும் விளையாட்டைக் குற்றமாகப் பிடிக்க வேண்டும்! அதற்காக வந்தேன்!" என்றார் அவர்.

'யூ......"

'அதெல்லாம்வேண்டாம்! ஒழுக்கம்கெடுவது ஆண்களுக்கும், பெண்களுக்கும் கூடாது! அதனால் எவ்வளவோ கெடுதல்கள்! மேலும் நெக்லசை வெகுமதியாகப் பெற்றிருக்கிறாய்! புரிகிறதா?"

'........" மகாலட்சுமி மௌனமானாள்!!

✽


விரைவில்

புதிய தொடர்கதை!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

## 'கண்ணைத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டிநாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10 ஆறுமாதம் ரூ 5

மலர் 4 | 7 9 67 இதழ் 8

# விழா எடுப்போம்!

இந்தக் கிழமை முழுவதும், அறிஞர் பெருந்தகையும் தமிழக முதலமைச்சருமான அண்ணா அவர்களுக்கு விழாவெடுத்து, பிறந்த நாளைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறது தமிழகம்.

பேரறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளைக் கொண்டாடும் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோர் சூளுரையினை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறோம் இதுவரையில்!

அதுபோலவே கழகம் பிறந்த நாள் முதல், கடந்த ஆண்டு செப்டெம்பர் திங்கள் வரையிலும் அண்ணா அவர்கள் பிறந்த நாள் பெருவிழா—ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்பும் வளர்ச்சியும் பெற்று வந்திருக்கிறது. 1967-ம் ஆண்டு செப்டெம்பரில் வந்திருக்கும் இந்த விழா—இதுவரையில் ஆடிக் களித்ததைவிட, அவனிக்கு எடுத்துக் காட்டியதைவிட, ஏற்றுக்கொண்ட சூளுரைகளின் தன்மையின் பரிணாமத்தைவிட எல்லா வகைகளிலும் மிக மிக முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டிருக்கிறது.

குடும்பத்து மூத்த அண்ணனாக—கழகத்தின் தலைவராக நாம் ஏற்றுக்கொண்டு, அவர்தம் சுட்டுவிரல் அசைவுக்கு நமது செயல் திறன் அனைத்தையும் அர்ப்பணித்து வந்திருக்கிறோம்.

இவ்வாண்டைய பிறந்தநாள் பெருவிழா காங்கிரஸ் நீங்கலாகப் பல எதிர்க்கட்சித் தலைவர்களும்கூட பங்கேற்றுச் சிறப்பிக்கும் ஒரு சிறப்பினை நல்கி இருப்பதற்குக் காரணம், அறிஞர் அண்ணா அவர்கள் இப்போது தமிழகத்தின் முதலமைச்சராகி விட்டார் என்பது அல்ல—அறிஞர் அண்ணா அவர்களது ஜனநாயகப் பண்பையும் செயலாற்றல், அறிவாற்றல் அனைத்தையும், கண்கொண்டு பார்த்தும், காது கொடுத்துக் கேட்டும் வருகின்ற வாய்ப்பினை அவர்களை பெற்றார்கள் என்பதுவேயாகும்.

நமது மாபெரும் தானைத் தலைவரின் சிறப்பினை நாம் அறிந்து புகழ்ந்துப் போற்றி வந்ததைவிட—வருவதைவிட, மாற்றாரும் கண்டு உவந்து போற்றிப் புகழ்ந்துரைப்பதானது நமக்குப் பெருமைக்குமேல் பெருமை சேர்க்க வல்லதாகும்!

'எங்கள் அண்ணா' என்று சொல்லிக்கொள்ளும்போது ஒருவகைப் பெருமை கிடைக்கிறது! அந்த பெருமை நமக்குக் கிடைக்குமாறு செயல்பட்டவர் நம் அண்ணன். அவருக்கு விழா எடுக்கிறோம்.

'எங்கள் தமிழக முதலமைச்சர்' என்று சொல்லிச் சுவைப்பதிலே ஒருவித பெருமிதம்! அப்பெருமிதம் நமக்குத் தோன்ற தன் செயலாற்றலால் செய்து காட்டியவர் நம் அண்ணன்! அவருக்குத்தான் விழா எடுக்கிறோம்.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு விழா எடுக்கிறோம் நாம்! நாடும் சேர்ந்து எடுக்கிறது, தங்கள் நலிவுகள் நசிந்துவிடும் என்ற நம்பிக்கையில்!

நாமும் நாடும் ஒருமிக்க இணைந்து எடுக்கின்ற இவ்வாண்டுப் பெருவிழா, இதனாலேயே சிறப்புப் பெறுகிறது. இந்தச் சிறப்பு நமக்குப் பல கடமைகளையும் உடன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

இந்தி வெறியர்களின் ஏகாதிபத்தியப் போக்கு மூர்க்கத்தனமாக நம்மீது பாய்ந்து கொண்டிருக்கிறது;

'சிவ சேனை' மூலம் தமிழ் நாட்டாருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் வாயிலாக இந்தி நாட்டாருக்கு எதிராக நம் சிந்தனையைச் செலுத்தும்படித் தூண்டப்படுகிறோம்;

கல்லூரிப் படிப்பிலும், தலைமை நீதி மன்றத்திலும் இந்தியை நுழைப்பதின் மூலம் தனித் தனி மொழி இனங்களின் நசிவுக்கு கால்கோல முயலும் கெடுமதி மூலம் நம் உதிரக் கொதிப்புக்கு 'அளவு கருவி' வைத்துப் பார்க்கும்படி ஆளாக்கப்படுகிறோம்;

அனைத்திந்திய மட்டத்தில் இவ்வாறு செயல்படுவதாகக் கூறப்படுவதின் மூலம், தமிழ் நாட்டின் 'பொறுமை'க்கு எல்லையிடு என்று அறிவிக்கப்படுகிறோம்;

மொத்தத்தில் நமது கவனங்கள் திருப்பிவிடப்படுகின்றன; செயலாற்றல் முடங்கிவிடும்படியாகச் செய்யப்படுகிறோம்!

அறிஞர் அண்ணா அவர்களது சீரிய தலைமையில் இயங்கும் அமைச்சரவை நாட்டு மக்களுக்கும், மாணவர்களுக்கும் மட்டுமல்லாது எல்லாதரப்பட்டவர்களுக்கும் ஆகக்கூடிய நலம் பயக்கும் அனைத்துக் காரியங்களையும் செய்து வருகிறது—செய்யவும் சிந்தித்து வருகிறது.

இந்நிலையில், காங்கிரசின் போக்கு அச்சமூட்டத்தக்கதாக அல்ல—வருந்தத்தக்கதாக ஆகிவருகிறது.

காங்கிரசிலிருந்து கொண்டு பேசுவதற்காக அமர்த்திக்கொள்ளப்பட்டிருப்பவர்கள், கழகத் தோழர்களின் பொறுமைக்கு 'அளவு கோல்' தேடும் நிலையைத் தோற்றுவித்துக்கொண்டு வருகிறார்கள்!

பேசாமல் கிடந்த காங்கிரசுத் தலைவர் காமராசர் பேசத் தொடங்கி வார்த்தைகளை உமிழ்ந்து வருகிறார்! பொருளாதார தத்துவங்களையோ, அரசியல் ராஜதந்திர முறைகளையோ வாரி வாரிக் கொட்டுவதாகக் கற்பனை செய்துகொண்டு ஊருக்கு ஊர், இடத்துக்கு இடம் முரண்படப் பேசிக்கொண்டு வருகிறார்!

தோழர்களின் உணர்ச்சி அலைகள் இதனாலெல்லாம் தூண்டப்பட்டுக் கொண்டே வருகிறது—வளர்கிறது!

இந்நிலையில்தான் இவ்வாண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது கழகமும் நாடும்.

எனவேதான் பொறுப்புக்கள் நமக்கு அதிகமாகி விட்டிருக்கின்றன.

'போற்றுவார் சிலர்—புழுதி வாரித் தூற்று
வார் சிலர்—சொன்ன சொற்களை மாற்றுவார்
சிலர்.'

என்கிறது புலவர் குழந்தை அவர்கள் எழுதிய இராவண காவியம்!

அதேபோல், கழகமும் கழக அரசும் போற்றுதலுக்கும், தூற்றுதலுக்கும் ஒரு சேர ஆளாகிவரும் இந்த நிலையில் நம் கடமையிலும், செயலிலும் தீவிரமும் தீர்க்க தரிசனமும் இருந்து தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர் முகாம் போர்க்குரலெழுப்பி இருக்கிறது.

இதேபோல், கழக அரசு தமிழுக்கு எதிராகச் செயல்படுகிறது என்ற எண்ணத்தில் என்று கூற முடியாது—அந்த விதமான மயக்கத்தி லாழ்ந்து தூண்டி விடப்பட்டு கழக அரசுக்கு எதிராக சில மாணவர்களையும் உசுப்பிவிட்டு 'ஆங்கிலத்துக்கு எதிராக' எனும் பெயரில் இயக்கம் தொடங்கவும் குரல் எழுந்துள்ளது.

மொழியின் பேரால், நியாய வாதங்கள் புறக்கணிக்கப்பட்டு, உண்மையான யதார்த்த நிலைக்குத் திரையிட்டு போலியான காரணங்களுக்காகப் போராட்ட எண்ணங்களை உண்டு பண்ணிவிடும் சூழல் வருந்தத் தக்கதுதானென்றாலும், அதனையும் சந்தித்து தக்க பக்க விளக்கங்களால் உண்மைக்கு வெற்றி தேடித் தரும் வாய்ப்பு கழகத் தோழர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பமாக வந்து சேர்ந்திருக்கிறது.

மாணவ மணிகளது உணர்ச்சிக்கு வரம்பு கட்டி—தமிழக அரசின் இதயார்த்தமான நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டி அமைதிச் சூழலையும் தோழர்கள் உண்டாக்க வேண்டும்.

அல்லாமல், காங்கிரசுப் பேச்சாளர்கள், கழக அரசின்மீது மாசு கூற முடியாத ஏமாற்றத்தால், விவசாயப் பெருமக்களது நல்லெண்ணத்தில் நஞ்சு கலக்கத் தக்கவிதமாக அவர்களைத் தூண்டி, கேடான வழியில் இட்டுச்செல்லும்படியான முறையில் தங்கள் பேச்சுக் கலையின் வித்தையை மாற்றிவரத் தொடங்கி இருக்கிறார்கள்.

தொழிற் புரட்சி, அரசியல் புரட்சி என்பதெல்லாவற்றையும்விட, ஒரு நாட்டின் விவசாயப் புரட்சிக்கு, அந்த நாட்டின் ஏற்றத் தாழ்வில் பெரும் பங்கு உண்டு. தமிழகத்தின் உணவுப் பண்ட விவசாயத்தின் ஏற்றத் தாழ்வோடுதான் நாட்டு மக்களது வாழ்க்கை பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

கழக அரசு தான் பதவிப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு முதன் முதலாக உணவுப் பண்ட உற்பத்தியின்மீது முழுக் கவனத்தையும் செலுத்தி, இன்னும் இரண்டொரு திங்களில், தமிழகத்தை பற்றாக் குறை மாநிலம் என்ற நிலையிலிருந்து, உபரி மாநிலம் என்ற நிலைக்கு உயர்த்தவும், வேற்று மாநிலங்களுக்குக்கூட ஏற்றுமதி செய்யமுடியும் என்ற அளவிலும் உயர்த்தி விட்டிருக்கிறது.

இதுகண்டுப் பொறுத இரும்பு இதயத்தினராம் காங்கிரசார், தங்கள் அரசியல் கடை 'வாணிபம்' இன்றி அடைபட்டுப் போகுமே என்ற அச்ச உணர்வில் ஆகாத முறையில் பிரசாரத்தைத் தொடங்கி, அதிக விலைக்குக் கொள் முதல்' என்ற முறையில் தூண்டி விடத் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்த முறையால் அரசுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் உள்ள நல்லுறவினை நசுக்கிவிட முடியும்—அதனால் உபரிநிலை மாறிவிடும்—என்ற தீநோக்கத்தில் உலவுவோர், தீய்ந்துவிடுவார்கள் என்பது உறுதியிலும் உறுதி என்றாலும் இதனையும்கூட ஆக்கித் தர வேண்டிய மிகப் பெரிய பொறுப்பும் கழகத் தோழர்களுடையதுதான் என்பது சொல்லாமலே தெரிய வருவதாகும்.

தமிழகத்தில் பூக்கத் தொடங்கியுள்ள பொற்காலத்தால் எதிர்காலம் வளனும் நலனும் பெற்று இந்தியத் துணைக் கண்டத்துக்கே ஒரு எடுத்துக் காட்டாகத் திகழப் போகிறது என்றால் அது அறிஞர் பெருந்தகை அவர்களாலும் அவரால் வழி நடத்திச் செல்லப்படும் கழகத்தாலும்தான் என்பது வெள்ளிடை மலை.

இந்த அளவு கடமைகளையும் சிறப்புக்களையும் நமக்கு நல்கி இருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாள் விழாவினைப் பெருமையோடு கொண்டாடுகிற நாம் அதே மூச்சில் நமது கடமைகளையும் மனங்கொண்டு செயலில் இறங்கிவிட வேண்டும்.

உலகத்தின் பொதுத் தன்மையாக, அறிவுரைகள் வழங்கும் நிலைமை பூதாகாரமாக வளர்ந்துவிட்டிருக்கிறது. செயலாற்றுந் திறன், எந்தக் காரணத்தாலோ மெள்ள மெள்ளச் சுருங்கி வரத் தலைப்பட்டு விட்டிருக்கிறது.

அறிவுரைகள் வழங்குவது எளிதுதான்! அதனைச் செயல்படுத்துவதும் அரிதுதான்!

ஆனால், கழகமும், கழக அரசும் அதற்கு முரணாக இருந்து முழுக்க முழுக்க செயலாற்றும் பாடி வீடாகவே இயங்கி வருவதனை, தரணி ஒப்புக்கொள்ளத் தொடங்கி இருக்கிற வேளை இது.

இந்த வேளையில் விழாவெடுக்கும் நாம், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது அறிவுரைகளை சிரமேற் றாங்கி, அவர் காட்டும் பாதை வழுவாமல் நடையிடுவோமாக!

அரசின் சாதனைகளை ஊர் ஊராக—தெருத் தெருவாக—வீடு வீடாக விளக்கிக் காட்டுவோமாக!

எதிரிக்கு எதிரி இளைத்தவன் அல்ல—என்ற முறையில்தான் போர் வியூகம் வகுக்கவேண்டும் என்பார்கள்! அந்த முறையில் நம் பிரசாரம் தொடங்கிச் சிறக்குமாக!

மொத்தத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நாம் எடுக்கும் பெரு விழா, நாட்டின் எதிர்காலத்தைக் கண்முன் கொணர்ந்து நிறுத்துவதாக அமையுமாக!

❀

முகப்பில்:

தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள்

தோ. கருணாநாதன்—குன்னூர், நீலகிரி.

R R முனுசாமி—மேல்மலையனூர்.

V. முனுசாமி, B COM —செஞ்சி.

# இணைக்கும் தகுதி இந்திக்கு இல்லை!

## உலக உறவின் உறுதுணை ஆங்கிலம்!

## மொழித்துறைத் தீர்வை அரசிடம் விடுக;

### அறிஞர் அண்ணா மதுரைப் பேருரை!

[ சென்ற இதழ் தொடர்ச்சி ]

விபர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிவரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை- எத்தனை ஏழைமைக்கு இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றார் என்பதனை மாணவர் உணர்ந்திடின் — அவர் உணர்வர் — அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும்; ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே, இத்தனை தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்; அஃது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும். கனவு காண்கின்றேனா? இல்லை; மாணவர் நினைப்பு அறிந்து கூறுகின்றேன். எதிர்காலம் அவர்களுடையது. அதனை இருளற்றதாக்கிடுவது அவர் பொறுப்பு. அதற்கான ஆற்றல் மிக்கார் அவர்கள். இஃது எனது நம்பிக்கை. ஒவ்வொரு நாட்டிலும், சிறப்புமிக்க கட்டங்களில், மாணவர்கள் முன்னணியில் நின்று பணிபுரிந்தனர் என்பதனை வரலாறு காட்டுகின்றது. இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடும் காலம், நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும்.

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக்கூடிய இலட்சியங்கள் நம்முன் நிற்கின்றன. ஆனால், அதே வரிசையில், வசீகரப் பூச்சுக்களுடன், மயக்க மூட்டத்தக்க பேச்சுக்களையும், குறிக்கோள் என்ற பெயரால் நிற்க விடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள் —அனைவரும் ஏற்கத்தக்கது; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்.

நாட்டின் ஒற்றுமைக்காக—உன் மொழி உன் மரபு அழிந்திடவும் ஒருப்படவேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது—இதனை இலட்சியம் என்றோ திட்டமென்றோ கூறுவது. இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொருட்செல்வம் நாளும் வளரவேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க இலட்சியம்—நாட்டுச் செல்வம் பெருகட்டும். அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது, இலட்சியமாகாது — அதனைக் கேலிக் கூத்தாக்குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம்;

கூடி வாழ்வோம் உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு—என்று முறை வகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக் குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், 'என்னோடு ஒன்றாக ஆடு இணைந்து விட்டது, நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில் 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

பட்டம் பெற்றோரே உமது தெளிவுரை கிடைத்து மக்கள் இதுபோன்ற விளக்கம் பெற்றிட வேண்டுமென விழைகின்றேன்.

அறியாமை, வறுமை ஆகியவற்றினை ஓட்டிடும் ஆற்றல் படை திரட்டிடப் பல்கலைக் கழகம் ஏற்ற இடம் என்பதனால் இவற்றினை விரித்துரைத்தேன்.

பயிற்று மொழி பாடமொழி ஆட்சி மொழி, இணைப்பு மொழி என்ற சொற்றொடர்கள் வேகமாக உலவிடக் காண்கின்றோம்.

'தாய் மொழி' என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தமிழ்மொழி நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணை பெற, ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது.

இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும் இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை, நாட்டுப் பற்று அற்ற தன்மை என்றும், தேசியத் தன்மானம் அற்ற நிலை என்றும் கூறுவார்

(7-ம் பக்கம் பார்க்க)

# அந்த ஒரு சதவிகிதம்!

[ எஸ். ஆர். ]

தமிழ் எழுத்துக்களையே தலைகீழாகப் பிடித்துக்கொண்டு விழிப்பவர்களிடம்—தலை போகிற காரியமானாலும் கட்டை விரலை நீட்டி 'மை' எங்கே என்று தேடுபவர்களிடம் போய்,

'ஆங்கிலம் அந்நிய மொழி தானே?' என்றால் 'யார் இல்லை என்றது?' என்று திருப்பிக் கேட்பதோடு நிற்கமாட்டார்கள். தெரியாதா வெள்ளைக்காரன் பாஷை?' என்று தெரிந்திருப்பதனையும் காட்டிக்கொள்வார்கள்.

கண்மூடித்தனமான ஆங்கில எதிர்ப்புகளுக்கு இந்தி மொழி வெறியர்கள் — இந்திதான் தேசிய — இணைப்பு மொழி என்பதனைக் கட்சிக் கட்டுப்பாட்டுக்காக ஒப்புக்கொள்ள வேண்டிய காங்கிரசுக்காரர்கள் மேற்கண்ட மக்களைத்தான் துணைக் கழைத்துக்கொள்ளுகிறார்கள்.

'ஆங்கிலம் என்ன ஆங்கிலம்? ஒரே ஒரு சதவிகிதத்தினர்தானே தெரிந்து வைத்திருக்கின்றனர். அதைத் தெரியாத 99 சதவிகிதத்தினரைப்பற்றிக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்ப்பது கிடையாதா?' என்று புள்ளி விவரத்துக்குப் பயன்படுபவர்கள் மேற்கண்ட மக்கள் தான்.

மொழிப்பிரச்சனையைமுதலில்பாதிப்பது—மொழிப் பிரச்சினைக்கு முக்கியமாக தொர்புடையவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மட்டுமே

என்ற அடிப்படை உண்மையை இந்தி மட்டுமே' என்பவர்கள் விளங்கிக்கொள்வதும் இல்லை. ஏற்கனவே தெரிந்திருந்தாலும் மற்றையோருக்கு விளக்குவதில்லை.

அப்படி எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் முப்பது சதவிகிதத்துக்கும் வரமாட்டார்கள் என்பது அடுத்து எடுத்துச் சொல்லப்பட வேண்டிய உண்மை நிலை.

இந்த இரண்டுஅடிப்படைகளையும் மக்களிடம் பரப்பாமல் 99சதவிகிதம் முக்கியமா ஒரே ஒரு சதவிகிதம் முக்கியமா என்று குறுக்கு வழியில் கணக்குபோட்டுக்காட்டுவது எழுதப்படிக்கத் தெரிந்தவர் — எழுதப்படிக்கத் தெரியாதவர் ஆகியோரிடையே ஒரு பகைமை உணர்ச்சியைக் கிளறிவிட்டு அதற்கு இடையில் புகுந்து மொழி வெறிக்கு வெற்றியைத் தேடிக்கொள்ளும் தந்திரப்போக்குகளில் ஒன்று.

மக்களை நன்குஉணர்ந்த மக்களோடு நெருங்கிப் பழகுவதை விரும்பிய பண்டிதர் நேரு எடுத்துக்கூறாத இந்த சதவிகித வாதத்தை அவரது மகள் இந்திரா மட்டும் புதிதாகக் கண்டு பிடித்து அதைத் தமிழகம் வரை வந்து தெரிவித்திருப்பது மொழிப் பிரச்சனையை அணுகுவதில் அவர் "வடக்கத்திய" போக்குக்கு அடிமையாகிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

உயர்வு தாழ்வு உணர்வுகள் — தேசிய மாறுபாடுகள் — மத வெறுப்பினைப் போன்ற வேற்றுமொழி மாச்சரிய உணர்வுகள் ஆகிய அடிப்படையில்தான் இந்தி மாநிலங்கள் ஆங்கிலத்துக்கு எதிராகப் படை திரட்டுகின்றன.

இந்திராவும் இங்கே உள்ள மற்றவர்களும் எடுத்துக்காட்டும் சதவிகிதவாதம் மேற்கண்ட விதண்டாவாதத்துக்குத்தான் இன்னும் வலி ஊட்டுகிறது.

அதே வாதத்துக்காக—அவர்கள் முறையிலேயே வேண்டுமானாலும் பதிலளிக்கலாம்.

ஆங்கிலம் அறவே வேண்டாம் அதுவும் உடனடியாக வேண்டாம் என்று கூறுபவர்கள் காட்டும் அந்த ஒரு சதவிகிதம் பேர்தான் அரசியல் —நிர்வாகத்துக்கே அடிப்படையாக இருக்கிறார்கள். இந்தியாவின் அன்றாட இயக்கத்துக்கே காரணமாக இருக்கிறார்கள். வண்டி பெரியது. கடையாணி மிகச் சிறியதுதான் எனினும் வண்டி ஓடுவது கடையாணியின் பாதுகாப்பில்தான்.

ஆங்கிலம் தெரியாத 99 சதவிகிதம் பேர்களால்தான் நிர்வாகம் நடைபெறுகிறது — நீதி மன்றங்கள் இயங்குகின்றன — கல்விக்கூடங்கள் இருக்கின்றன — விஞ்ஞானம் வளர்கிறது—தொழில் நுட்ப அறிவு பெருகிறது என்று கூறத் தயாராக இருக்கிறார்களா?

அந்த ஒரு சதவிகிதத்தினர் தானே இத்தனைக்கும் அதற்கு மேலாக எஞ்சிய 99 சதவிகித மக்களுக்கும் அச்சாணியாக இருக்கிறார்கள்?

அதற்கெல்லாம் கூடபோகவேண்டாம். காங்கிரஸ் ஒரு அனைத்திந்திய அமைப்பாக வளர்ந்தது எப்படி? வடக்கே இருந்த பெரிய தலைவர்கள் இங்கேவந்து 99-சதவிகித மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டா சுதந்திரத் தாகத்தினை வளர்த்தார்கள்? இங்கே இருந்த தலைவர்களையும் அங்கே இருந்த தலைவர்களையும் இணைத்தது எது?

அது கூட வேண்டாம்; ஆங்கிலத்தின் துணைகொண்டுதானே ஆங்கிலேயர்கள் விரட்டப்பட்டனர்? அதைகூட இல்லையென்று கூற முடியுமா?

ஆங்கிலத்துக்கு எதிராக வளர்க்கப்படும் தவறான வாதங்கள் பின்னால் இந்தி மொழிக்கு எதிராகவே எடுத்துரைக்கப் பயன்படும் என்பதை மொழித் துறையில் வெறி கொண்டலைவோர் உணர்தல் வேண்டும்.

அந்நிய மொழி எனவே வேண்டாம் என்ற பாடத்தையே இந்தி மொழி தெரியாதவர்களிடமும் படித்தால் நிலைமை என்ன ஆகும்? என்பதனையும் சற்று அமைதியாகச் சிந்திக்கவேண்டும்.

99-சதவிகித மக்கள் ஆங்கிலம் தெரியாதவர்கள்—எனவே அது தேவையில்லை என்று கூறுபவர்கள் அந்த 99-சதவிகிதம் பேரும் அவரவர்கள் மொழியிலாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில்லை என்பதை மறந்து விடுகிறார்கள்.

நினைக்கவும் பார்க்கவும் பயங்கரத் தோற்றமளிக்கும் குஷ்டரோகி தனது உடலின் கோர உருவத்தையே பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்திக் கொள்வதைப்போல இருக்கிறது ஆங்கிலம் வேண்டாமென்பதற்காக 99-சதவிகித மக்களைத் துணைக்கு அழைப்பது.

மதுவிலக்கு தேவை என்ற கொள்கையைப்போல இந்த நாட்டில் குறிப்பிட்ட ஆண்டுக்கும் குறிப்பிட்ட வயதுடைய சிறுவர்கள் எல்லோருக்கும் கல்வி வசதி

5-ம் பக்கத் தொடர்ச்சி

உளர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன்; கருதுவார் என்று கூறவில்லை காரணத்தோடு.

ஆங்கிலம், முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர். அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனாகவும் இனாமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதை, தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணோம். தொழில் நுட்ப அறிவு பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது இந்தப் பேச்சு எழக் காணோம். மொழி பற்றி மட்டுந்தான் இப் பேச்சுப் பேசுகின்றனர். எனவேதான் அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்து இல்லை; கூற மட்டும் செய்கிறார்கள் என்றுரைத்தேன்.

ஆங்கிலம் கூடாது என்று கூறுவதுடன், இந்தியே இணைப்புக்கு ஏற்ற மொழியென்று அவர்கள் வலியுறுத்தும்போது, கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்றாகத் தெரிகிறது.

இந்தப் போக்கு வெற்றிபெற விடமாட்டோம் என மாணவருலகு உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கின்றேன். மொழிப் பற்றின் எடுத்துக் காட்டாகத் திகழும் மாணவர்கட்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோது, மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கல்களை, புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை நீக்குவதற்கான முயற்சிகளை மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும், நம்பிக்கையுடன், என்று கேட்டுக்கொள்கின்றேன்;

பல்கலைக் கழகத்தில் பயிலுங் காலை, வாழ்க்கையின் நீண்ட பெரும் பயணத்திலே இது பாசறைப் பருவம் என்ற உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும்.

பட்டம் பெற்றிடும் நண்பர்களே! உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்தவண்ணம் இருப்பதனை அறிந்து, அதற்கேற்ப உமது செயல் முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்;

இம் மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள், மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை. முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது.

இன்று புறப்படும் படை அறிவுப் படை; இப் பல்கலைக் கழகத்தினின்றும் அமைந்து வெளிக் கிளம்பும் முதற் படை; இதனை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, சென்று வருக, வென்று வருக என்று கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதம் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசு ஆகட்டும்; பண்பாடு உமது கவசமாகட்டும்; அறிவு உமது படைக்கலனாகட்டும்; அறநெறி உமது வழித்துணையாகட்டும்; உறுதியுடன் செல்வீர்; ஊக்கமுடன் பணிபுரிவீர்; ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ தரணிக்குத் துணை நின்றிடும் தகுதி பெற. சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

✽

## புதிய வானம்

இதய வயல் தொடும் ஈர நதியே!
உதய நிலவே! உயிரோ வியமே!
ஆழி முத்தை அணிந்த நகையே!
பாழில் முளைவிடும் பனிப்பூ விதையே!

எங்கும் இருளே எழுந்த போது
எங்கள் சரித்திரம் இளைத்த போது
தங்கக் கதிரின் தணலை வளர்த்த
செங்கதிர்ச் செல்வா! செய்யுள் தலைவா!

பாடல் ஏட்டில் பாதை வகுத்தே
ஆடல் விரலை அசைத்த புலவரும்
திருமாரத் தழைமேல் ஆசை வைத்த
புதியபோர் யானையைப் புரந்த மன்னரும்

சிந்தனைத் தத்துவம் சிறகை விரித்த
சந்தனச் செய்யுள் சந்த ஒலிக்கு
எற்பவாழ்ந் திட்ட ஏற்புடை மக்களும்
போற்றிய தமிழகம் போற்றிய தலைவா!

கோடி கோடிக் கோடித் தலைமுறை
ஆடிய திருவடி அமைதியில் புதைய
விரித்த கார்குழல் விழுதுகள் வளர
எரித்த தீவிழி ஈரநீர் சோர

இருந்தனள் மருந்தெனும் எங்கள் அன்னை
அருந்தவப் பயனால் அளிசுரந் தாய்நீ!
பூத்தது விடியல்! போந்தது வல்லிருள்!
பூத்தது எங்கள் புதிய வானம்!

—நா. காமராசன், எம். ஏ.

செய்து தரப்படவேண்டும் என்பதுவும் அரசியல் சட்டத்திலேயே இடம் பெற்றிருக்கும் ஒரு நோக்கம்.

இருபதாண்டு நிர்வாகத்தில் அந்த நிலைமையையே இன்னும் எட்டியபாடில்லை.

அதற்கும் மேலாக எழுதப் படிக்கத் தெரிந்த மக்களின் எண்ணிக்கையும் வருந்தத்தக்க வகையில் குறைவாக இருக்கிறது.

இந்த நிலைமையில் குஷ்ட ரோகிக்கு தனது கோர உருவம் பயன்படுவதுபோல்—

—எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் தொகை இந்திய அரசின் இந்தி மொழிப் பிரியர்களுக்கு ஆங்கிலம் கூடாது என்ற வாதத்துக்குப் பயன்படுவது கொடுமையிலும் கொடுமையே!

ஒரு சதவிகிதத்துக்கும் 99-சதவிகிதத்துக்கு ஒரு போட்டி—பொருமை — வீணான பேதங்கள்—வெறும் மோதல்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அந்தக் குழப்பத்துக்கு இடையிலாவது ஆங்கிலத்தை அகற்ற முடியாதா? இந்தியைத் திணித்துவிட முடியாதா என்று முயலும் தந்திரம்தான் இந்த புதிய வாதம்.

ஆங்கிலத்தை ஒரு அந்நிய மொழியாக மட்டுமே கருதி செயல்படுவதன் விளைவு இது.

ஆங்கிலத்தை ஒரு மொழியாகக்கூட கருதத் தேவையில்லை.

இலக்கை எட்டுவதற்கு, தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு உள்ள ஒரு நிரந்தர சாதனம் என்ற உண்மை உணரப்படும்போதுதான் இத்துணைக் கண்டத்தின் மொழிச் சிக்கலுக்கே ஒரு விடிவுகாலம் கிட்டும்.

●

[தொன்மை மிகுந்த பாரதத்தின் கங்கைக் கரையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து மறைந்த காவியத் தம்பதிகளின் பவித்திரமான வாழ்க்கையை விளக்கும் கவிதை ஓவியம்]

# ★ நிவேதனம் ★

—துறவி—

காதலர்க்கு மட்டும்தீ நெருப்பாய் வீசும்
  கடன்ஒளியால் வெளிச்சமிடும் நிலவு நேரம்
வீதியிலே நின்றிருக்கும் விளக்கு யாவும்
  விழித்தபடி ஒளிவழங்கும் இரவுக் காலம்
நீதியிலே மனம்தோய்ந்து அறக்க ருத்து
  நினைவுகளைக் கவிதைகளாய்த் தொகுத்து வைத்துக்
கீதைவழி அன்றுடம் வாழ்ந்து வந்த
  கவிவாசஸ் பதிமிச்ரர், மணக்கோ லத்தின்

அலங்காரம் குலையாமல், பருவம் எய்தா
  அரும்புகளால் நிரம்பியுள்ள மஞ்சம் மீது,
தொலைதூர விண்வெளியில் கவிதைப் பொங்கும்
  துணைவிழியைப் பதித்தபடி அமர்ந்தி ருந்தான்
தலைநிமிர்த்த முடியாத நாணத் தோடு
  தாலிஎன்ற பொன்வேலி இட்ட நங்கை
சிலதோழி யர்பிடித்துத் தள்ள, பாட்டுச்
  சிந்தனைக்கா ரன்முன்னே வந்து நின்றாள்.

வாலிபத்துப் பருவத்தில் அழகி னோடு
  விளங்கிடினும், சிற்றின்ப வேட்கை பாலே
கோலவிழி மங்கையர்பால் கண்ணி ரண்டைக்
  கற்பிழக்கச் செலுத்தாமல்; ஞான மூட்டும்
நூலான சுவடிகளின் மீது மட்டும்
  நயனத்துப் பார்வைதனை விதைத்து வாழ்ந்த
மூலிகைபெகைக் கவிஎழுதும் கவிஞன் அந்த
  மலர்மடந்தை எழில்வடிவில் தடுக்கி வீழ்ந்தான்

கோவிலுக்குத் தினந்தோறும் சென்று நின்று
  கும்பிட்டு வழிபாடு செலுத்தும் தெய்வத்
தேவியவள் உயிர்மூச்சுப் பெற்று இங்கு
  தரிசிக்க வந்தனளோ! எனவி யப்புப்
பாவலனின் மனத்தலத்தில் கவிய சென்று
  புதுப்பாவை செங்காவிக் கரம்பி டித்தான்
''பாமதி''என் றுபெயர்கொண் டந்த மங்கை
  பக்தியுடன் அக்கவிஞன் அடியில் சாய்ந்தாள்

புதுமான்போல் மருளுகின்ற பெண்ணைத் தூக்கிப்
  படுக்கையிலே அமரவைத்துச் சாய்ந்தி ருக்கும்
மதுமங்கை வாழைப்பூ முகம்தி ருப்பி
  மீன்போன்ற இணைவிழியை உற்றுப் பார்த்தான்
இதுவரைக்கும் மோனத்தில் ஆழ்ந்தி ருந்து
  இதழுக்கு ஒய்வுதந்த அழகி கண்ணில்
எதைநீங்கள் தேடுகின்றீர்? என்ற வாறு
  இசைச்சொற்கள் சிலவற்றைச் செலவு செய்தாள்.

பவளஇதழ் அரங்கேற்றம் செய்த சொல்லைப்
  பாட்டரசன் செவிமடுத்து மனைவி கண்ணில்
தவழ்ந்திருந்த தன்பார்வை தனைப்பி ரித்துத்
  தழுவிநிற்க உரிமைபெற்ற அவளைக் கொஞ்சும்
சுவையோடு அணைத்தபடி 'புடவை என்ற
  சிறைக்குள்ளே ஒளிந்திருக்கும் அழகே! மன்னன்
அவைக்களத்தில் முதல்முதலாய்ப் பாடிக் காட்டும்
  அழகான காவியத்தைப் போன்ற பெண்ணே

சிற்றின்ப வேட்கைகளை மட்டும் நெய்து
  சிருங்கார மயக்கத்தைக் கொடுத்து நித்தம்
சுற்றிஎனை வில காகப் பிணைத்து, மங்கச்
  செய்திடுமோ கவிஉணர்வை; அன்றி நெஞ்சில்
முற்றிஎழும் கற்பனையில் கவிதைப் பூக்கும்
  மங்கலத்தை இவ்விழிகள் தருமோ? என்று
சற்றுநினைத் துப்பார்த்தேன்' எனமொ ழிந்து
  சாயவிட்டான் பாமதியை மடியின் மீது.

தன்இச்சைப் போல்படகு ஓடி டாமல்
  துடுப்பிற்கு ஆட்பட்டுத் தானே போகும்?
என்விருப்பம் எனவாழ்வில் தனியாய் ஏதும்
  இனிஇருக்கப் போவதில்லை; என்னைத் தொட்ட
இன்றுமுதல் எதிர்கால வாழ்வும் உங்கள்
  ஏவலுக்குக் கட்டுண்டே கழியும், இந்தச்
சென்மத்தில் பூஜ்ஜியம்போல் இருந்து, உங்கள்
  சேர்க்கையினால் செல்வாக்கைப் பெற்று வாழ்வேன்

எனக்கவிஞன் கேள்விக்கு விடையாய் அந்த
  இருட்டு நிலாப் போன்றநங்கை மொழிந்தாள்; தூய
மனமூலம் நினைவுகளை வளர்த்துப் பக்தி
  மணக்கின்ற பாட்டியற்றும் கவிஞன் சொந்த
மனையாளின் புனிதமிகு வார்த்தைக் கேட்டு
  மனக்கம்பீ ரம்கொண்டான், லட்சி யத்தின்
முனைமழுங்க நேராது என்ற றிந்து
  மாலையிட்ட பாமதியை முத்த மிட்டான்,

முதல்முதலாய், பூங்கன்னம் இதழ் ரண்டும்
  முத்தமிட்ட எச்சிலினால் நனைய, கோதை
இதுவரைக்கும் அறியாத உணர்ச்சி யாலே
  இளநெஞ்சம் விம்மிபெழ நாணம் பூண்டாள்
புதுமோக ஆர்ப்பரிப்பில் சலன முற்ற
  பாவலனோ புலனடக்கி விலகி நின்று
மதுமாலைப் போல்கிடக்கும் மனைவி தன்னை
  மயக்கமற்ற மனநிலையில் பார்த்த வாறு

'கிளைமீது ஒட்டியுள்ள இலையோ எந்தக்
  கணமேனும் உதிர்ந்திடலாம், இதனைப் போன்றே
வினைபாட்டாய் நம்உடலும் மூச்சு ஊஞ்சல்
  விசையடங்க பிணமாகி வீழும், வாழ்வில்
களிப்பாகிக் கவருகின்ற இனிமை யெல்லாம்
  கலைந்தோடும் சட்டென்று தகர்ந்து போகும்
உளமார ஆராய்ந்து பார்த்தால் அற்ப
  உருவெளியின் தோற்றமென வாழ்வு தோன்றும்!

எப்போது வரும்மரணம் நமக்கு? இங்கு
  எவராலே முன்கூட்டி அறியக் கூடும்?
இப்போதும் நேர்ந்திடலாம்! நமது வாழ்வோ
  எக்கணமும் அவிந்துவிடும் விளக்குப் போலாம்!
அப்படிச்சற் றும்நிச்ச யமற்ற இந்த
  அற்பமிகு என்பிறவி முடியும் முன்னர்
ஒப்பற்ற நூலொன்றை இயற்று தற்கு
  உறுதியினை எடுத்துள்ளேன்; காவி யத்தை

நிறைவாக்கி முடிக்கின்ற வரைக்கும், என்னை
  நீஇனிமேல் சிற்றின்ப ஆசை யாலே
கறைபாயும் மனத்தோடு தொடக்கூ டாது
  கண்ணாலே நோய்மோகம் தரக்கூ டாது
புறங்காத்து இதயத்தை, வேட்கைத் தூண்டும்
  புலனடக்கி நீவாழ வேண்டும், 'இந்த
அறக்கட்ட ளைக்குள்நான் கட்டுப் பட்டு
  அன்றுடம் வாழ்ந்திடுவேன்' எனஎ னக்கு

சத்தியம்நீ செய்துதர வேண்டும் என்றான்
  செய்யுளென்ற பயிர்செய்யும் கவிஞன் 'வாழ்வு
முத்தமிடும் எச்சிலிலே நிறைவ தில்லை
  மோகத்தால் மட்டும்சீர் பெறுவ தில்லை;
சத்தியமாய் நிச்சியமாய் நமது வாழ்வு
  நெருங்காத பிரிவாலே உயரு மென்றால்
பத்தினிநான் நீங்களிடும் கட்ட ளைக்குப்
  பணிந்தபடி தனிவாழ்வு நோன்பு கொள்வேன்.

திங்களுக்கு ஒருதடவை மரண முற்றுத்
  திரும்பவும்வான் மன்றத்தில் வளரு கின்ற
மங்கைமுக உவமைநிலா நீட்டு கின்ற
  மயல்வெளிச்ச அனல்பட்டுத் துடித்தி டாமல்
பொங்கியெழும் காதலொடு பூவி ரித்த
  படுக்கையறைக் காவியத்தைப் பயின்றி டாமல்
சங்கற்ப உரையாற்றி தான்அ ளித்த
  சத்தியத்தில் பாமதியாள் ஒடுங்கி நின்றாள்

அப்போதே தான்நினைத்த கவிதை நூலை
  அலங்காரத் தேர்நிறை வாக்கி னாற்போல்,
இப்பாரில் எழுத்தாலே கீர்த்தி தன்னை
  ஈட்டுகின்ற கவிமிச்ரன், இனிமை நெஞ்சின்
துப்புரவைப் பிரதிபிம்பம் செய்யும் காதல்
  துணைமனைவி பயின்றமொழி கேட்ட பின்பு
கொப்பளிக்கும் பெருமையொடு கடைசி யாக
  காரிகையின் அதரத்தை ஈரம் செய்தான்.

மஞ்சத்தை அன்றுமுதல் விலக்கி வைத்தார்
  மனத்தாலும் அதைப்போன்றே தனித்து நின்றார்
கொஞ்சமும்தன் கவிக்கணவன் உள்ளம் இந்தக்
  கோலஉடல் அழகாலே மயங்கி காமச்
சஞ்சலத்தால் தவிப்பதற்கு விடமாட் டேன்,செஞ்
  சொற்களினால் கவிவேள்வி இயற்று கின்ற
நெஞ்சத்தை நான்அழிக்க மாட்டேன்'' என்று
  பாமதியாள் நிலைசேர்ந்த தேர்போல் வாழ்ந்தாள்

இரவென்றும் பகலென்றும் உணர்ந்தி டாமல்
  இலக்கியத்துத் தவக்கனலில் கவிஞன் மூழ்கி
வரிச்செய்யுள் சுவடிகளை வளர்த்து வந்தான்
  வாழ்க்கையிலே பிரச்சுகத்தை மறந்த வாறு!
எருவைப்போல் பாமதியும் கணவ னுக்கு
  இளைக்காத மனத்தோடு உதவி செய்தாள்!
திருமணத்துச் சுகம்வேண்டி அவர்கள் நெஞ்சம்
  தடுமாற்றம் கிஞ்சித்தும் அடைய வில்லை!

அறுபத்து ஆண்டுகளைக் கடந்த பின்பு
  அக்கவிஞன் காவியத்தை நிறைவு செய்தான்
மாறுபட்டுப் போகாமல் அதுவ ரைக்கும்
  மனமொன்றி இருவருமே இல்ல றத்தில்
ஊறாது வும்சந்திக் காமல் அந்த
  ஒப்பரிய அறப்பணியை முடித்து வைத்தார்
கிழட்டு மேனியெல்லாம் தளர்ந்து போன
  கிழவியென்ற பாமதியாள் மிச்ரர் முன்னே

அமர்ந்தபடி பணிவோடு ஒருநாள் இங்கு
  அதிசயமாய் இயங்குகின்ற வாழ்க்கை ஓட்டம்
அமைதியிலே போய்ஒடுங்கி மூச்சுக் காற்று
  ஆட்டத்தின் துடிப்படங்கிச் செத்துப் போனால்
சுமந்துசென்று இடுகாட்டில் நமக்கு ஈமச்
  சடங்குகளைச் செய்வதற்கோ பிள்ளை இல்லை
நமக்கிதனால் இறந்தபின்பு 'வீடு பேறு'
  நிச்சயமாய்க் கிட்டாது'' என்று சொன்னாள்.

கிழமனைவி இதழ்ப்பேச்சைக் கேட்ட மிச்ரர்
  குறுநகையை உதட்டோரம் ஒளிர விட்டுக்
குழந்தைபல பிறந்தாலும் நமக்கு இந்தக்
  குடும்பவாழ்வில் அனைவருமே இறந்து போவர்
எழுத்தாலே நாம்இருவர் இணைந்து பெற்ற
  இக்காவியப்பிள்ளை ஞால வட்டம்
அழிகின்ற நாள்வரைக்கும் நிலைத்து நின்று
  அன்றுடம் நம்பெயரைத் தெரிய வைக்கும்

ஆலயத்தில் நிவேதனமாய்ப் படைக்கும் பூப்போல்
  அர்ப்பணித்து நம்வாழ்வை இலக்கி யத்தின்
சீலமிகு கோவிலிலே வாழ்ந்து விட்டோம்
  சரித்திரத்தின் சிகரத்தில் ஒளிர்ந்து நிற்போம்
தோலுடலின் வெறிவாழ்வை ஒதுக்கி வைத்துத்
  தெய்விக உறவாழ்வில் வாழ்ந்து விட்டோம்
போலிமனம் கொள்ளாமல் தியாக மென்ற
  பொற்புமனம் கொண்டவளே, எனக்கு மட்டும்

உன்உதவி கிடைக்காமல் போய்இ ருந்தால்
  ஒருநாளும் இப்பணியைச் செய்தி ரேன்நான்
இன்றைக்கு நினைக்கையிலே நமது வாழ்வை
  இணைவிழியில் நீரரும்பு பூக்கும், கோடு
மின்னலைப்போல் நிலையற்ற வாழ்வில் தேக
  மோகத்தை உதறிவிட்டுக் கவிதை வாழ்வில்
ஒன்றிநின்ற நீஎனக்குத் தெய்வம், உன்றன்
  உள்ளமென்ற சந்நிதியில் இதையே பூவாய்

பவித்திரமாய் அர்ப்பணித்து வணங்கு கின்றேன்
  பாமதிஎன் றஉன்பெயரை யேநான் இந்தக்
கவிதைக்குச் சூட்டுகின்றேன் மரண முற்றுக்
  களவுக்கு இரையான பின்பும் நாமோ
புவியில்இக் கவிதைஉள்ள வரைக்கும் சேர்ந்தே
  பலர்மனத்தில் கொலுவிருப்போம்' என்றார் மிச்ரர்
கவிக்கணவன் வாக்கியத்தைக் கேட்டு அந்தக்
  கிழமனைவி இளம்பெண்போல் நாணம் கொண்டாள்!




3—19

## முரடன் பாய்ந்தான்!

அரண்மனையைவிட்டு வெளியே புறப்பட்ட தூமகேது வழியில் ஒரு தடாகத்தினுள் இறங்கி முகத்தைக் கழுவிக்கொண்டு பூத்திருந்த தாமரை மலர் ஒன்றைப்பறித்தெடுத்துக்கொண்டு, கரைமீது வந்து உட்கார்ந்தான்.

கையிலிருந்த தாமரை மலரைப் பார்த்தான். அதிலே அஞ்சலையின் முகம் தோன்றி, அவனைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரித்தது.

'கனகசேனனுக்கும் அஞ்சலைக்கும் காதலா? கல்யாணமும் நடக்கப்போகிறதா?'

இந்த எண்ணம் மனத்தில் எழுந்ததும், யாரோ சாட்டையால் அடித்ததைப்போலப் பதைபதைத்தான்.

'வஞ்சகனே! கிழக்குரங்கே! உன்னிடம் விளையாட நான் என்ன கிழவியா? நெற்றியிலே நீறு, கழுத்திலே உத்திராட்சம், உதட்டிலே சிவன் ......உள்ளத்திலே காமம்! அண்ணனையும் கொன்றுவிட்டோம்! கேட்க இனி ஆள் கிடையாது!' என்ற நினைப்பால் தைரியம் கொண்டுவிட்டாயோ! பாண்டிய நாட்டின் சோலையிலே நுழைந்துவிட்ட கருநாகமே உன் உயிரை இதோ போக்குகிறேன்!....... பெண்மையின் அழகைக் கண்டு, நாகம் ஆடுகிறது! விஷ விருக்ஷமே, உன்னை வெட்டி வீழ்த்தாமல் விடப்போவதில்லை!'

அன்றொரு நாள் அஞ்சலை ஆத்திரத்தால் உகுத்த இந்த வார்த்தைகள், தூமகேதுவின் மனத்தில் கல்லில் செதுக்கிய எழுத்துக்களைப் போல அழியாமல் நிலைத்து நின்றுவிட்டிருந்தன.

அய்யோ பாவம், அனாதைப் பெண், திக்கற்றவள் தோஷம் நமக்கு எதற்கு என்று இத்தனை நாளும் பெருந்தன்மையோடு நடந்து கொண்டேன்! அஞ்சலை, இனிமேல் தான் இந்தத் தூமகேது யார் என்று தெரிந்துகொள்ளப்போகிறாய்! இந்தப் பாண்டிய மண்டலமே என் சுண்டுவிரலின் ஆட்டத்தைக்கண்டு நடுநடுங்குகிறது! பேதைப்பெண்ணே நீ எனக்கொரு பொருட்டா? காதல் கொண்டுவிட்டாயா? கனகசேனன் மீதா? இந்தப் பரந்த உலகில் அந்தப் பைத்தியக்காரன்தானா, உனக்குக் கிடைத்தான்? பார்க்கிறேன். உன் காதல் நிறைவேறுகிறதா என்று! சேரநாட்டு அரசியாகப் போகிறாயா? சொகுசாக அரண்மனையில் உலவப்போகிறாயா?.........என் அருமை பெருமை உனக்குத் தெரிந்திருந்தால் என் அந்தஸ்தும் அதிகாரமும் உனக்குப் புரிந்திருந்தால், மதுரையைவிட்டு வெளியே சென்றிருப்பாயா? மமதைப் பிடித்தவளே மன்னன் மகன்மீதா வலை வீசியிருக்கிறாய்! இந்தத் தூமகேது உயிரோடு இருக்கும்வரை. உன் காதல் நிறைவேறாது—நிறைவேறவும் விடமாட்டேன்!' என்று அவன் தரையில் தட்டி தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

'காட்டிலும் ஆற்றங்கரையிலும் காதல் புறாக்களே பறந்து சுற்றுகிறீர்களா? சுற்றுங்கள், சுற்றுங்கள் வல்லூறு இங்கே வரும்வரை. வட்டமிட்டுச் சுற்றுங்கள்!' என்று கையிலிருந்த மலரைப் பார்த்து முணுமுணுத்தபடி, எழுந்து நடந்தான்.

அவனொரு குடிசையின் எதிரே வந்து நின்று. கையைத் தட்டினான்.

குடிசையின் உள்ளே இருந்து வெளியே வந்த ஒரு முரடன், தூமகேதுவைக் கண்டதும் வணங்கிப் பயபக்தியோடு வாயைப் பொத்திக் கொண்டு நின்றான்.

'டேய், இந்த முறை உனக்கு ஆயிரம் பொன் தருகிறேன்! காரியத்தை முடித்துக்கொண்டு வர வேண்டும்!' என்று தூமகேது அதிகாரக் குரலில் பேசினான்.

'யாரை சாமி, எமலோகத்திற்கு அனுப்பவேண்டும்?'

அந்த முரடன் மெதுவாகக் கேட்டான்.

'எமலோகத்திற்கு அல்லடா— மதுரைக்குக் கொண்டு வர வேண்டும்!'

'யாரை!'

'அதுதாண்டா.........அந்த வஞ்சகியை!......'

'எந்த வஞ்சகி?'

'அடஅட. செய்தியை உன்னிடம் கூறுமலேயே ஏதேதோ சொல்லிக் கொண்டே போகிறேனே! அஞ்சலை உனக்கு நினைவிருக்கிறது அல்லவா?'

'அதென்னசாமி, அப்படிக்கேட்டு விட்டிங்கோ! வஞ்சியிலிருந்து ஏமாற்றி நான்தானே அவளைத் தூக்கிக்கொண்டு வந்தேன்!'

'அதனால்தாண்டா, திரும்பவும் அந்த வேலைக்கு உன்னையே அனுப்பத் தீர்மானித்து இருக்கிறேன்! சென்ற முறையைப்போல இந்த முறையும் வெற்றியோடு திரும்ப வேண்டும்!......அட ஏண்டா, சிரிக்கிறாய்? முன் தடவைப்போல, இந்தத் தடவையும் என்னை ஏமாற்றி விட்டுப் போய்விடுவாள் என்று கருதுகிறாயா? இனிமேல் நானும் ஏமாறமாட்டேன் — அவளாலும் ஏமாற்ற முடியாது!'

'சோலையப்பன் அனுப்பினான்னு முன்னே சொன்னேன், ஏமாந்து போனா! இப்போ என்னைப் பார்த்தாலே போதுமே பயந்து ஓடிவிடுவாளே?,

'அரண்மனைக்கு நீ போகவேண்டாம்! அவளும் கனகசேனனும் ஆற்றங்கரையிலும் காட்டிலுந்தான் எந்நேரமும் சுற்றிக்கொண்டிருக்கிறார்களாம்!

நல்ல புதராகப் பார்த்து ஒளிந்து கொண்டிரு! சந்தர்ப்பம் வாய்க்கும் போது அந்தச் சாகசக்காரியை வல்லூறைப்போல அடித்துக்கொண்டு வந்துவிடு. தெரிகிறதா?'

'அப்படியே செய்கிறேன் சாமி!'

'கனகசேனன் யார் தெரியும் அல்லவா?'

தெரியுங்கோ!'

'சர்வ ஜாக்கிரதையாகக் காரியத்தைச் செய்யவேண்டும்!'

அதெல்லாமா சாமி எனக்குச் சொல்லணும்? அஞ்சலையை மதுரைக்குக் கொண்டுவந்துவிட வேணும்—அவ்வளவுதானே!'

'மதுரைக்கா? வேண்டாம் வேண்டாம்! முன்பு கொண்டு வந்தாயே, அதே ஆரண்ய மாளிகைக்கே கொண்டுவந்துவிடு — தெரிகிறதா?'

,சரி, சாமி!'

'சரி, இனி அஞ்சலை என் கைபட்டுக் கசங்கிய மலராகப்போவது நிச்சயம்!' என்றுகூறி, கையிலிருந்த தாமரை மலரைக் கசக்கித் தரையில் ஏறிந்தான்.

அதன் பிறகு ஒருமாதம் கழிந்தும் அஞ்சலையோ அல்லது அந்த முரடனே திரும்பி வராததினுல், தூமகேது அதிக ஆத்திரமடைந்தான்.

'தடிக்கழுதை சொன்ன வேலையைச் செய்யாமல் எங்கே தூங்கிக் கொண்டிருக்கிருனே?' என்று அவனைப் பழித்துப் பேசினுன் ஒற்றர் நாயகம்.

அந்தத் தடிக்கழுதை தூங்கிக் கொண்டா இருந்தான்? இல்லை! தனியாக அஞ்சலை எப்பொழுது சிக்குகிருள் என்று ஒவ்வொருநாளும் — ஒவ்வொரு நொடியும் — எதிர்பார்த்தபடி, புதரிலோ பாறையின் மறைவிலோ அவன் ஒளிந்துகொண்டிருந்தான். சோலையப்பன், கனகசேனன், அஞ்சலை ஆகிய மூவரும் ஒன்ருக இருக்கிருர்களே — அவள் மட்டும் தனியாக வரவில்லையே என்ற ஏக்கத்தில் ஒவ்வொரு நாளையும் அவன் கழித்துக்கொண்டிருந்தான்.

அன்று......

ஒரு மரத்துண்டின்மீது சோலையப்பன் உட்கார்ந்திருக்க புற்றரையில் கனகசேனனும் அஞ்சலையும் அமர்ந்திருந்தனர்

"நான்கைந்து நாட்களாக நானும் பார்க்கிறேன், உங்கள் முகம் வாட்டமாகவே இருக்கிறதே, சோலையப்பா?" என்று கனகசேனன் கேட்டான்.

'அத்தானுக்குச் செந்தாமரையின் நினைவு அதிகமாகிவிட்டது, அதைக்கூட உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா?" என்று குறும்போடு கூறி, புன்னகை செய்தாள், அஞ்சலை.

'இல்லை என்று நான் சொல்லவில்லை, அஞ்சலை! செந்தாமரையின் நினைவும் என்னை வாட்டுகிறது— அதைவிட வேறென்றும் அதிகமாக என் மனத்தை வேதனையடையச் செய்கிறது!" என்று சோலையப்பன் சொல்லி புற்றரையில் அவர்களுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

"எதை நீங்கள் சொல்கிறீர்கள் அத்தான்?"

"குலசேகரனின் திருமணத்திற்கு நான் சென்றிருக்கவேண்டும் அல்லவா?"

'நீங்கள் செல்வதுதானே?"

"அடுத்தபடி நான்மட்டும் போக முடியும் நீங்கள் இருவரும் வராதபோது? கனகசேனன்தான் ஒரே பிடிவாதமாக வரமுடியாது என்று சொல்லிவிட்டார்! மன்னர் கூட என்னை வரும்படி சொல்லி அனுப்பியிருந்தார்! அப்படியிருந்தும் நான் போகவில்லை என்ருல்?......எனக்கு உயிர்ப்பிச்சை தந்த அந்த உத்தமரின் திருமணத்தில், நான் கலந்து கொள்ளாமல்போனது பெருந்தவறு அஞ்சலை?"

"நாங்கள்தான் தங்களைப் போகும்படி பலதடவை சொன்னேமே!"

"சொன்னீர்கள் — ஆனாலும் நீங்கள் வராமல், நான் மட்டும் தனியாகப்போக எனக்கு மனம் வரவில்லை! திருமணமே, நடந்துவிட்டது—இனிமேல் அதைப்பற்றிப்பேசி என்ன பயன்?.........அஞ்சலை நானென்று சொல்கிறேன், நீங்கள் தடைசொல்லமாட்டீர்களே!"

'சொல்லுங்கள், அத்தான்!"

"மதுரைக்குச் சென்று, ஒரே ஒரு முறை செந்தாமரையைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்!"

என்ன அவசரம் அத்தான், உங்களுக்கு?"

அவசரம் இல்லை அஞ்சலை அந்த அளவிற்கு என்மனம் மிகவும் கலங்கிவிட்டிருக்கிறது! நான் கொல்லப்பட்டுவிட்டதாக, கல்லறையில் அடைபட்டுவிட்டதாக அங்கே செந்தாமரை கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பாள் அல்லவா, அந்தத் துக்கத்தில் அவள் தன் உயிரையே மாய்த்துக்கொண்டால்?"

'செந்தாமரை சாதாரணப் பெண் அல்லவே அத்தான், என்னைப்போல! பாண்டிய இளவரசியாயிற்றே! அவள் ஒருபோதும் அத்தகைய கோழை எண்ணங்களுக்குத் தன் உள்ளத்தில் இடம் தரமாட்டாள்! தாங்கள் எடுத்த பணியை முடிக்க அவள் பாடுபட்டுக்கொண்டிருப்பாளே அன்றி, தற்கொலைக்கு ஒருநாளும் அவள் தயாராக மாட்டாள்!"

'எந்நேரமும் என் மனத்தில் ஒரு விதக் கலக்கம் இருந்துகொண்டே இருக்கிறது. என்னைத் தடுக்காதீர்கள். ஒரே ஒரு முறை மதுரைக்குச் சென்றுவிட்டு வந்துவிடுகிறேன்.

"தூமகேது எப்படிப்பட்டவன் என்பது தாங்கள் அறிந்ததுதானே? செந்தாமரைக்கு நாம் ஏன் செய்திகூட அனுப்பாமலிருக்கிருேம்? எப்படியும் அவன் கையில் அது சிக்கிவிடும் என்றுதானே பேசாமலிருக்கிருேம்! அப்படியிருக்க நீங்கள் மட்டும் போவது சரியா? அவன் கண்ணில் நீங்கள் பட்டுவிட்டால் அதன்பிறகு



இத்தனை நாளும் நாம் பட்ட சிரமங்கள் எல்லாம் வீணாகப் போய்விடும் அல்லவா?''

'அர்த்தமில்லாமல் நீ பயப்படுகிருய் அஞ்சலை! கனகசேனு நீ என்ன சொல்கிருய்?''

''அஞ்சலை சொல்வதுதான் எனக்கும் சரி என்று படுகிறது'' என்று கனகசேனன் சொன்னதும் சோலையப்பன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''அத்தான் இப்படிப் பாருங்கள்! நாளைய தினமே மதுரைக்கு நம் பிக்கையான ஒரு ஆளை அனுப்பி வைக்கலாம்''

''நான் உயிரோடு இருக்கிறேன் என்ற செய்தியைச் செந்தாமரையிடம் கூறவா?''

''இல்லை அத்தான், அவளுக்குச் செய்தி தெரிந்தால் மதுரையில் ஒரு கணமும் நிற்கமாட்டாள்! உடனே வஞ்சிக்குப் புறப்பட்டுவிடுவாள்! அதனுல் நாம் திட்டமிட்டிருக்கும் திடீர்தாக்குதல் பயனற்றதாகப் போய்விடும்! செந்தாமரை எப்படி இருக்கிருள் என்பதைத் தெரிந்து வரவே, ஆள் அனுப்பலாம் என்று சொல்கிறேன்! மன்னர் மதுரைக்குத் திரும்பியதும், அவரது அனுமதி பெற்று, நீங்கள் மதுரைக்குச் செல்லலாம்! அதுவரை தாங்கள் இங்கேயே இருப்பதுதான் நல்லதென்று கருதுகிறேன்.........என் அண்ணு பொன்னையாவின் கனவை நினைவாக்க, நீங்கள் ஒருவர்தானே அத்தான், இருக்கிறீர்கள்?'' என்று சொன்னதும், அஞ்சலையின் கண்கள் கலங்கின.

அவளது கண்ணீரைக் கண்டதும், சோலையப்பனின் மனம் திடுக்கிட்டது.

''வருந்தாதே அஞ்சலை, நான் மதுரைக்குச் செல்லவில்லை!'' என்று உறுதியான குரலில் சொல்லிவிட்டு, சோலையப்பன் எழுந்து முன்பு உட்கார்ந்திருந்த மரத்துண்டின் மீது போய் உட்கார்ந்தான்.

அண்ணனின் நினைவு வந்ததும், அஞ்சலையின் கன்னங்களில் கண்ணீர் ஓடத்தொடங்கிவிட்டது. அந்த வருத்தத்தை மாற்றி கண்ணீரை நிறுத்த முயன்ருள்—முடியவில்லை.

நிமிர்ந்த அவளது பார்வைக்கு எதிரே சிறிது தூரத்தில் காட்டு மல்லிகை பூத்திருப்பது தெரிந்தது. துக்கத்தைத தணித்துக்கொள்ள எழுந்துசென்று மலர்பறித்துக் கொண்டு வரலாம் என்று நினைத்தாள்.

''அத்தான், அதோ தெரிகிறதே மல்லிகைச் செடி! அங்கே போய்க் கொஞ்சம் மலர்கொய்துகொண்டு வருகிறேன்!'' என்று அவள் எழுந்தாள்.

''நானும் உடன் வரட்டுமா?'' என்று எழுந்தான், கனகசேனன்.

''இல்லை, நீங்கள் அத்தாளுேடு பேசிக்கொண்டிருங்கள். நான் பறித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்!'' என்று அஞ்சலைமட்டும் தனியாகச் சென்ருள்.

அந்த மலர்ச் செடிகளின் பக்கத்திலிருந்த புதரில் ஒளிந்துகொண்டிருந்த முரடன், இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம்கிடைப்பது அரிது என்று எண்ணி அவள்மீது பாய்ந்து. வாயை மூடினுன்.

''அத்தான்!'' என்று குரல் கொடுக்க அவள் எவ்வளவோ திமிறிப்பார்த்தும் முடியாமல் போய்விட்டது.

[வளரும்]


கோவை மாவட்ட

# கூட்டுறவு நூற்பு ஆலை

தபால் பெட்டி-8

## தாராபுரம்.

★

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40, 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன சிறந்த முறையில் நடந்துவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்.

நிர்வாகத்தினர்.

# பிரச்னை தீருமா காமராசரே!

—பழநி—

**அன்புள்ள நண்பா!**

"ராஜாதிராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜகம்பீர, ராஜஒய்யார, ராஜகுலதிலக, ராஜதிரிபுவன காமராசர் பராக்! பராக்!!

ராஜீய வல்லுநர்! மொழித்துறை மேதை; பொருளாதாரப் புலி! காமராசர் பராக்!!!

தண்டைச் சிலம்பெடுத்து, நண்டுப்பிடிகொடுக்கும் நடனமாட வருகிறார் காமராசர்!

அகோ வாரும் பொதுமக்களே! மன்னாதி மன்னர்—மண்டலாதிபதி காமராசர் உங்கள் குறைகளைக் கண்டறிய—விருப்பு வெறுப்புக்களைக் கேட்டறிய வருகிறார்! வருக! வருக! அனைவரும் வருக!!"

"டண்.....டண்......டண்......டண்......டண்......"

வேலூர் வீதிகளில் இப்படியாகத் தண்டோரா முழக்கம் கேட்கவில்லை; ஆனால் நண்பா, தலைவர் காமராசரின் இரண்டாவது கட்ட தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணம் பற்றிய அறிவிப்புகளை இதழ்களில் கண்டதும் இப்படியான கற்பனைதான் எனக்கு ஏற்பட்டது!

ரத, கஜ, துரக, பதாதிகள் அனைத்தும் புடைசூழ வந்து, அங்கங்களைக் குலுக்கிக் குலுக்கி நடை நடந்து—அதாவது கம்பீரமாக—கூரிய பார்வைகளை லாவகமாகச் சுழற்றிவிட்டு அரியாசனத்தை ஒரு பார்வையிட்டுவிட்டு 'டக்'கென்று அமர்ந்துகொண்டு, 'மாமந்திரி! மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்டுவிட்டு, பதில் கிடைத்த பின், "குடிமக்கள் எல்லோரும் நலமா? குறைவற வரிகளைக் கட்டுகிறார்களா?" என்று விசாரணை நடத்தும் மன்னாதி மன்னனைப்போல—காமராசரது உலா விளம்பரப்படுத்தப்பட்டதைக் கண்டு, ஒரு கணம் திகைத்தே போனேன்!

வேலூரிலிருந்துதான் தலைவரது யாத்திரை தொடங்குவதாகப் படித்தவுடன் எனக்கு எட்டு மாதங்களுக்கு முந்திய சில காட்சிகள் நினைவுக்கு வந்தன.

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்"

தி. மு. க. ஆட்சிக்குக் காங்கிரஸ் கேடு தேடாது"

"ஐந்து ஆண்டுகளுக்கும் தி. மு. க.வே இருந்து ஆளவேண்டும்"

"மதுவிலக்குக் கொள்கையில் கழக அரசும், அண்ணாத்துரையும் தீவிரமாக இருப்பதனைப் பாராட்டுகிறேன்"

"என் பாராட்டுக்கள் தி. மு. க. அரசுக்கே தவிர, தி. மு. க.வுக்கு அல்ல"

என்பனபோன்ற "பொன்னுரை"கள் அங்கே சிந்தப்பட்டதாகப் படித்தவுடன் திகைப்பும் வியப்பும் பன்மடங்காயின. அதோடு ஐயங்களும் சில கப்பிக்கொண்டன.

எதெற்கெடுத்தாலும் சந்தேகக் கண் கொண்டு காண்பதுவே உன் இயல்பாகிவிட்டது என்று நீ முணுமுணுப்பது தெரிகிறது. என்ன செய்வது? கேடிப் பட்டியலில் பெயர் பொறிந்து போனபின், ஊரில் எந்தக் குற்றம் நிகழ்ந்தாலும் முதன் முதலில் அந்தப் பட்டியலில் உள்ள நபர்களைத்தானே சென்று விசாரணை நடத்துகிறார்கள் போலீசார்! அதைப்போல ஐயப்பாட்டுக்கு உரிய நிகழ்வுகளுக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டுவிட்ட பின்னர் சொல்லும் செயலும் எத்தனைதான் தெளிவாய் இருந்தாலும், சிறிது தயக்கம் காட்டத்தானே வேண்டி இருக்கிறது?

இப்போது மீண்டும் படித்துப்பார்:

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்"

தெளிவாகத்தான் சொல்லி இருக்கிறார். வேலூரில் விருந்துகொண்டு சொல்லி இருக்கிறார். பல்லாயிரக் கணக்கில்(!) கூடி—விண்ணப்பங்களை ஏந்தி வரிசையில் நின்றுகொண்டிருந்த மக்கள் முன் நின்றுகொண்டு கம்பீரமாக — உண்மையாகவே அவர் உள்ளத்தில் தோன்றிய கருத்தினை வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார்.

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்க்கமாட்டோம்"—என்று!

புரிகிறதா நண்பா! வேலூரிலிருந்து இதனை ஏன் சொல்கிறார்? கழக ஆட்சியினைக் காங்கிரஸ் கவிழ்க்காது என்று மக்கள் மன்றத்தின் முன்வந்து மண்டியிட்டுச் சொல்லிவிட வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏன் ஏற்பட்டது?

எட்டுத் திங்கள்களுக்கு முன்.

இதே வேலூரிலிருந்துதான், இவரது முன்னிலையில்தான் காங்கிரஸ் பேச்சாளர் பட்டியலில் 'சூடான' இடம் பற்றிக் கொண்டுள்ள ஒரு அம்மையார் 'ஆழமான குழி' பற்றிப் பேசினார்! ஒன்று—இரண்டு—நூறு—ஆயிரம் அடிகள் பற்றிக்கூட அல்ல இது 1967-ஆம் ஆண்டு ஆகையால் அந்த அம்மையார் 67 ஆயிரம் அடிகள் ஆழம் பற்றிப் பேசினார் பெருமிதத்தோடு!

67 ஏழாயிரம் அடிகள் ஆழம் என்று கூறிவிட்டு, அந்த அம்மையார் மேடையைத் திரும்பிப் பார்க்க—அங்கே புன்னகை மலர்ந்த முகத்தோடு காங்கிரசுத் தலைவர் என்ற பதவிப் பொறுப்போடு காமராசர் அமர்ந்திருக்க— இம் தொடர்ந்து பேசு' என்று ஆசி நல்கி விழிகளால் கூற—

'தி. மு. க. - வை, இந்தத் தேர்தலில்
67 ஆயிரம் அடிகள் ஆழக் குழி தோண்டிப்
புதைப்போம்!'

என்று (பலத்த) கைதட்டல்களுக் கிடையே கூறியதனை செவியாறக் கேட்டுக் களித்தவரல்லவா காமராசர்!

வேலூர் சென்று சேர்ந்ததும், அந்தக் காட்சிகள் அவரது அகக் கண்முன் வந்து நின்று, கேலி செய்திருக்காது—இடித்துக் காட்டி இருக்கவேண்டும்.

ஐயையோ! இந்த வேலூரில்தானே அந்த ஆனந்தம், 67 ஆயிரம் அடி ஆழத்தில் தி. மு. க. வைக் குழி தோண்டிப் புதைக்கப் போவதாக 'சூல்' அல்ல—'சூள்' எடுத்துக்கொண்டது! அதன் பிறகுதானே அந்தத் தீனா மூனா கானா இப்போது ஆட்சி பீடத்தையேக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது! தீமூகாவின் நிர்வாகத்தில் உள்ள நகரசபை—நகரம் ஆயிற்றே இது! இந்தத் தொகுதியில்கூட தி மு. க. தானே தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறது!'

'ஐயோ! இவ்வளவு பெரிய கூட்டம் கூடி இருக்கிறதே! இவ்வளவு பேர் முகத்திலும்...இருக்கும், இருக்கும்...எல்லோருமே தி. மு. க. - வுக்கு ஓட்டுப் போட்டவர்களாக இருக்கவேண்டும்! நாம் எதையாவது பேசினால்...'

அவரது நெஞ்சு பதைத்திருக்கிறது! நினைக்கிறார்.

'வழக்கம்போல தி. மு. க. வைத் தாக்கி,
இழித்து, பழித்துப் பேசினால்...'

வாய் திறக்கிறார் பேச்சுக்கள் உதிர்கின்றன;

'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை
நாங்கள் கவிழ்க்க மாட்டோம்'

'முதலமைச்சர் மதுவிலக்குக் கொள்
கையில் தீவிரமா யிருப்பதைப் பாராட்டு
கிறேன்'

கை தட்டல் ஒலி வானைப் பிளக்கிறது! அது எதற்கு? அவரது கருத்தை ஆதரித்தா? அல்லது ஐயோ! எட்டு மாத காலத்தில் எவ்வளவு பெரிய தடுமாற்றம்—ஏமாற்றம்! பாவம் காங்கிரஸ்'—என்றா?

அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை! கொஞ்சம் ஆழம் பார்க்க நினைக்கிறார்!

'என்னிடமிருந்து அப்படியான பேச்சுக்
களை எதிர்பார்த்தால் நீங்கள் ஏமாந்துபோவீர்
கள்! நான் அந்தவிதமாகப் பேசப் போவ
தில்லை!'

உனக்கே தடுமாற்றம் ஏற்ப கிறதல்லவா! எப்படியான பேச்சுக்களைப் பேசி அவர் பழக்கப்பட்டவர்? அவரிடமிருந்து யார் எப்படிப்பட்டப் பேச்சுக்களை எதிர்பார்ப்பார்கள்?

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமை உணர்வை, புதை குழிக்கு அனுப்பிவிடப் போகிற மொழிச் சிக்கலுக்குச் சரியான தீர்வு காட்டும் வகையில் அவரது பேச்சு இருக்கும் என்று நீ எதிர்பார்க்கமாட்டாய்! எனக்குத் தெரியும்.

சிவசேனையின் மிருகத்தனமான போக்குப் பற்றி கண்டனம் தெரிவிப்பார் என்றுகூட நீ நினைக்கமாட்டாய்! அவர் அப்படிப்பட்ட நிலைமைகளுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமாட்டார் — கட்டுப்படுத்திக் கொண்டு, பார்க்கிறேன் காமராசரை!' என்று அவர்கள் சொல்லும்படியான நிலைக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளமாட்டார்—என்றும் உனக்குத் தெரியும்.

பின் எப்படி?

'நான் அவ்விதமாகப் பேசப் போவதில்லை' என்று கூறுவது எதனைக் குறிக்கிறது? என்று நீ தடுமாறத் தேவையில்லை! ஏனெனில் அவர் அவ்விதமாகப் பேச மாட்டார்!!

'தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்கமாட்டோம்' என்று பேசமாட்டாரா? அதுவும் இல்லை. அப்படித்தான் பேசிவிட்டாரே! அதாவது 'கழக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும்' என்ற கருத்துப்படப் பேசப் போவதில்லை! ஏன்!

'அவர்கள் 5 ஆண்டுகள் முழுதும்
இருந்து ஆளவேண்டும்'

என்று மக்கள் தீர்ப்புக் கூறிவிட்டார்கள் அதனால் அவர் அப்படிப் பேசமாட்டார்.

ஆனால் நண்பா! இவர் என்ன கழகத்துக்கு வக்காலத்து வாங்கத் தொடங்கிவிட்டாரே என்று மேடையில் உள்ளவர்கள் தன்னைப் பற்றி நினைப்பார்கள் இல்லையா! அதற்காக ஏதாவது பேசவேண்டுமில்லையா! பேசுகிறார்:

''...6 லட்சம் டன் உணவை அதிகமாக
உற்பத்தி செய்யப் போவதாகச் சொல்கிறார்
கள்! இவர்கள் இந்த 6 மாத காலத்தில் எத்
தனைப் பம்ப்பு செட்டுகளைப் போட்டார்கள்?
விதைப் பண்ணை வைத்து ஆராய்ச்சி செய்
தார்கள்? 6 லட்சம் டன் உணவு உற்பத்தி
அதிகமானால் அதன் பெருமை யாருக்கு?
நமக்குத்தானே!!''

என்று மேடையைத் திரும்பிப்பார்க்கிறார்! பாவம் காமராசர் என்று சொல்லிவிடத் தோன்றுகிறது! மக்களது குறைகளைக் கண்டறியவும், விறுப்பு வெறுப்புக்களைக் கேட்டறியவும் புறப்பட்ட உலாவில் இப்படியான மணி மணியான கருத்துக்களை உகுத்துத் தன் முகத்திலும் தன் கட்சியின் முகத்திலும் சாக்கடைச் சேற்றை வாரிப் பூசிக் கொள்ளும்படி ஏற்பட்டதை நினைத்து!!

20 ஆண்டுக்காலம் அவர்களே இந்த நாட்டை—ஆண்டுக்கொண்டிருந்துவிட்டு, உணவு இறக்குமதி செய்யக்கூடாது' என்று இலட்சியம் ஏற்படுத்திக் கொண்டு விட்டு, இலட்சியத்தில் விழுந்த ஓட்டை காரணமாக அமெரிக்கா முதலான வெளிநாடுகளுக்குப் பிச்சைப் பாத்திரம் தூக்கிக்கொண்டு ஓடோடிப்போய் கேட்கின்ற நிலைக்கு ஆளாகி இருந்துவிட்டு, 6000 கோடி ரூபாய்களுக்கு மேல் விவசாயத்துக்குச் செலவும் செய்துவிட்ட பின்னரும், அரிசி ஒன்றுக்காக மட்டும் நீண்ட 'க்யூ' நின்ற நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்துவிட்டு அப்படி நின்றவர்களைப் போலீசைவிட்டு அடித்துத் துரத்திவிட்ட காட்சிகளைப் படைத்த பின்பு—

தி. மு. க-வின் அதிக உணவு உற்பத்தித்
திட்டத்தால் தங்களுக்குத்தான் பெருமை
என்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட
வேண்டாமா?

வெளிப்படையாகச் சொல்கிறாரே காமராசர்! யாரைத் திருப்திப்படுத்த?

கடந்த 20-ஆண்டுக்காலத்தில்கூட வேண்டாம்—அது சுதந்திரக் குழந்தையின் மதலைப்பருவம் — கடந்த ஆண்டுக்கு முன்னதாக — அதுவும்வேண்டாம் 1966-லாவது இந்த நிலைமையைத் தோற்றுவித்திருக்கலாமல்லவா!

அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்! அக்டோபர் திங்களுக்குப்பின் தமிழகம் உபரி மாநிலமாகும்; வெளிமாநில களுக்கும் அரிசி ஏற்றுமதி செய்ய முடியும்—என்று!

அதற்குப் பதில்சொல்லும் வகையில் பேசி, இப்படி கரியைப் பூசிக்கொள்வானேன்? அவர்களால் செய்ய முடியவில்லை.

மின்சாரம் வழங்கினார்களாம்! ஆராய்ச்சிப் பண்ணைகள் நடத்தினார்களாம்! பம்ப்பு செட்டுகள் போட்டார்களாம்! இத்தனையையும் செய்து—செய்தவர்களால் உபரிகாட்ட முடியவில்லை—வேண்டாம்—தன்னிறைவு நிலையையாவது அடைந்திருக்கமுடியும் — அதுவும் செய்யவில்லை.

காமராசர் கூற்றுப்படி—அவர்கள் செய்ததை வைத்துக்கொண்டுதானே கழகம் இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறது? காங்கிரசுக்கு இது முடியாமற்போனது ஏன்?

கேட்கமாட்டார்களா 'மக்கள்? ஒரு கட்சிப் பெரும்பான்மைதான் 'இங்கு' வேண்டும் என்று திட்டவட்டமாக முடிவு செய்துகொண்டு அதற்கேற்ப கழகத்தைத் தேர்ந்தெடுத்த மக்கள் என்ன சிந்தனை செய்யத் தெரியாதவர்களா? இன்னுமா காமராசர் மக்களைப் புத்தித் தெளிவு அற்றவர்கள் என நினைக்கிறார் என்று கேட்கத் தோன்றுகிறது! பாவம் காமராசர்! கேட்கத் தேவையில்லை; காரணம் காமராசரது காங்கிரசுக்குத் திறமையில்லை; அதனால் உள்ளவற்றைக்கொண்டு தன்னிறைவு பெறும் நிலையை எய்தமுடியவில்லை.

கழகத்தின் வெற்றிப் பெருமிதத்தை 'நமக்குத்தானே பெருமை?' என்றுமட்டும் கேட்டுக்கொள்ள முடிகிறது!

நண்பா! 'தலைவர் உலா' முடிவு பெறவில்லை — தொடர்கிறது. கூர்ந்து கவனி! குறைகளைக் கண்டறியும் நோக்கம் எங்கேனும் தென்படுகிறதா? என்று. விருப்பு வெறுப்புக்களைக் கேட்டறியும் பாங்கு எங்கேனும் ஒளிந்திருக்கிறதா? ஒட்டியாவது இருக்கிறதா என்று!

தலைவர் காமராசர் திருவண்ணாமலை வருகிறார்! அவ்விதம் பேசுவேன் என எதிர்பார்க்காதீர்கள் என்று வேலூரில் பேசிவிட்டு, அதனை அடுத்துள்ள திருவண்ணாமலைக்கு வருகிறார். வேலூரில் அறிவுரை கற்றுக்கொண்டுவிட்டு — திருவண்ணாமலை வந்து அறிவுரை தருகிறார். "கழகத்துக்குக் கேடுண்டாக்க நான் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவில்லை என்ற முகவுரையுடன் பேச்சைத் தொடங்கி, எதைதை என்னிடம் எதிர்பார்க்காதீர்கள் என்று அறிவித்தாரோ அதனை திருவண்ணாமலை மக்களுக்கு அறிவிக்கிறார்! மக்கள்மூலம் அறிஞர் அண்ணாவின் அரசுக்கு அறிவிக்கிறார்]

> 'மக்கள் கொடுத்த அதிகாரத்தைக் கொண்டு, அவர்களையே மிரட்டுவதா? விற்பனைவரி அதிகாரிகளைக்கொண்டு வியாபாரிகளை மிரட்டுவதா? போலீசாரைவிட்டு மற்றவர்களை மிரட்டுவதா?''

நண்பா! மிரட்டுவதா? மிரட்டுவதா? என்று அவர் யார் யாரை மிரட்டி இருக்கிறார் பார்த்தாயா? எட்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர் அல்லவா காமராசர்! அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் ஆயிற்றே அவர்! அவர் தயவில் அல்லவா இந்தியத் துணைக்கண்டத்து பிரதமர் பதவிக்கு இந்திரா அம்மையாரே வர முடிந்திருக்கிறது! அப்படிப்பட்டவர் இப்படிப்பேசுகிறார்! மிரட்டாதீர் மிரட்டாதீர் என்று!

முதலமைச்சர் அண்ணாவுக்கும் கழக அரசுக்கும் சொல்கிறார் இப்படி!

> அதிகாரத்தைக் கொண்டு மக்களை மிரட்ட முடியும்;

முதலமைச்சர்

# அறிஞர் அண்ணா

அவர்கள்

எழுதும்

கதை, கட்டுரைகளுடன்

# "காஞ்சி"

# 3-ம் ஆண்டு மலர்

தயாராகிறது!

அமைச்சர்கள்,

முன்னணித் தலைவர்கள்

எழுதுகிறார்கள்!

> அதிகாரிகளை கொண்டு வியாபாரிகளை மிரட்ட முடியும்;
>
> போலீசைக் கொண்டு மற்றவர்களை மிரட்ட முடியும்

என்று யோசனை சொல்லித் தருகிறார்! ஏன்! நாட்டில் அராஜகம் தோன்ற! குழப்ப நிலைகள் ஏற்பட! அந்தக் குட்டையில் மீன் பிடித்துக்கொள்ள!

அல்லவென்றால், அண்ணாவின் ஆட்சிபற்றி 'மிரட்டாதீர்' என்று சொல்ல மனம் ஒப்புமா? காந்தியக் கொள்கையில் உயிருள்ள — பிடிப்புள்ளவற்றை, காங்கிரசே செய்யாதபோது — அதனைக் கழகத்தின் மூலம் செயல்படுத்தி வரும் அறிஞர் அண்ணாவைப் பார்த்து அப்படி மிரட்டாதே! என்று சொல்ல அறிவுத் தெளிவுள்ள எந்த ஒருவராலும் முடியுமா? முடியாதே!

காமராசர் 'மிரட்டாதே' என்று சொல்வதன் மூலம்—'மிரட்டு' என்று அறிவுரை கூறுகிறார்! அல்லாமல் வேறென்ன? திருவண்ணாமலை சென்று ஏன் இதனைச் சொல்லவேண்டும்? கழகத்தின் சாதனைகளைத் தமக்குப் பெருமை தருவன என்று எடுத்துக்கொண்டபின் இந்த மிரட்டல் யோசனை எதற்கு? முதலமைச்சராகத் தான் இருந்த காலத்தில் மக்களை மிரட்டிய தன்மையை—வியாபாரிகளை மிரட்டிய தன்மையை — மற்ற மற்றவர்களை மிரட்டிய தன்மையை — இப்படி மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார்! என்பதல்லாமல் வேறென்ன!

> மத்திய அரசு காங்கிரசால் இயக்கப்பெறுவது என்ற தடித்த எண்ணத்தில் — இவைகள் காங்கிரசால் நிகழ்த்தப்பெறும் என்பதற்கு முன்னோட்டமான பேச்சு என்பதல்லாமல் வேறென்ன பொருள்?

மக்களை மிரட்டாதே! என்று சொல்லி மக்களை மிரட்டிவிட்டு, வியாபாரிகளை மிரட்டாதே என்று வியா

பாரிகளை மிரட்டிவிட்டு, மற்ற மற்றவர்களை என்று எல்லா தரப்பட்டவர்களையும் மிரட்டிவிட்டு, பாய்கிருர் தருமபுரிக்கு!

அங்கும் வேலூர், திருவண்ணுமலையைக் 'கக்கி' விட்டு, சேலத்துக்குத் தாவுகிருர்!

'அப்படியெல்லாம் பேசமாட்டேன்' என்று வேலூரில்தானேசொன்னுர்! வேலூர் மக்கள்தானே அவர்கள். சேலம் மக்கள் காமராசரைப் புரிந்தவர்கள் அல்லவா! அவர்களுக்காகச் சொல்கிருர்! மொழிச் சிக்கல் தீர்வுக் கொள்கையைப் புடம்போட்டு எடுத்துக் காட்டுகிருர்!

> "நேருவின் உறுதிமொழியை நிறைவேற்றுவதன் மூலமே மொழிப் பிரச்னைக்கு சரியான தீர்வுகாண முடியும்."

என்கிருர்! நண்பா! நேருவின் உறுதிமொழி—தற்காலிகமான ஏற்பாடே தவிர–நிரந்தரத் தீர்வுக்கு வழிகாட்டுவதல்ல; பிரச்னையைத் தள்ளிப்போடும் ஒரு உபாயமே தவிர, தீர்வுக்குரிய முறையல்ல!

ஆனுலும், அதனைச் சட்ட வடிவமாக்கும் முயற்சியை நேருவே மேற்கொண்டார் — முடியவில்லை; மனநோய்ப்பட்டார்!

லால்பகதூர் முயன்ருர் — எதிர்ப்புக்குள் அடங்கி முடங்கிப் போய்விட்டார்!

இந்திரா அம்மையாரும், சவாண் அவர்களும் முயன்ருர்கள்! பேச்சு மூச்சைக் காணேம்!!

இதோ இந்த தொடர்க் கூட்டத்தில் என்ருர்கள்; அதோ அந்த தொடர்க் கூட்டத்தில் என்ருர்கள்.

விடிவைக் காணேம்!

இத் திங்கள் தொடக்கத்தில் துணைப் பிரதமர் மொரார்ஜிதேசாய்க்கும் தமிழக சட்ட அமைச்சர் மாதவனுக்கும் துணைக்கண்டம் கவனிக்கத்தக்க வாக்குவாதமேற்பட்ட பின்–சரித்திர முக்கியத்துவமும் பெற்றுவிட்ட அந்த நிகழ்ச்சிக்குப் பின்—

> "ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தை சில இந்திக்காரர்களும் எதிர்க்கிருர்கள்! அந்த எதிர்ப்பையும் அலட்சியம் செய்துவிட முடியாது."

என்று பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் பேசி இருக்கிருர்கள்! பிரதமரின் பேச்சு எதைப் பிரதிபலிக்கிறது?

தமிழக சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் செய்தி நிருபர்களுக்களித்த பேட்டியில் இதுபற்றிக் குறிப்பிடும்போது

> "ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தை அவர்கள் கொண்டு வருவார்கள் என்பதில் நம்பிக்கை இல்லை; அப்படியே கொண்டுவந்தாலும் அதில் 'உயிர்' இருக்குமா என்பதையும் சொல்ல முடியாது."

என்ற கருத்துப்படப் பேசி இருக்கிருர்கள்.

பிரதமர் பேச்சையும், மண்புமிகு மாதவன் அவர்களுடைய பேச்சையும் ஒப்பிட்டுப் பாரேன்! "சில இந்திக்காரர்களும் எதிர்க்கிருர்கள்! அதனையும் அலட்சியப் படுத்திவிட முடியாது" என்று பிரதமர் சொல்வதின் ஆழம் என்ன? கிடைக்கும் பொருள் யாது?

"மருமகனின் இளமையை நான் அலட்சியப் படுத்திவிட முடியாது" என்று ஒரு மாமியார் சொன்னுல் அதன் பொருள் என்ன? காரி உமிழத்தக்கதல்லவா!

காமராசர் சொல்கிருர்:

> "நேருவின் வாக்குறுதி மூலம்தான் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்!"—என்று!

சொல்லிவிட்டு,

> "இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை என்பதில் இங்குள்ளவர்கள் வேறுவிதமாக மக்களைத் தூண்டிவிடுகின்றனர்; 'இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை' என்ருல் எத்தனைக் காலம் என்று இந்தி பேசுபவர்கள் அவசரப்படுகின்றனர்!

என்கிருர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் 14 மொழிகளை தேசிய மொழிகள் என்று ஏற்றுக்கொண்டுவிட்டபின்னர் ஒரேஒரு மொழிக்கு அரசியல் அந்தஸ்த்து ஏன் என்று மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது—இந்திக்கு வக்காலத்து வாங்கும் உரிமை, இந்திக்காரர்களுக்கு ஏது? அந்தத் தகுதிதான் அவர்களுக்கு ஏது? இந்திக்காரர்கள் அவசரப்பட என்ன யோக்யதை இருக்கிறது? அவர்கள் அந்த மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள் என்று எப்போது ஆனதோ—அப்போதே அந்த மொழி விவகாரத்தில் அவர்கள் கலந்து கொள்ளும் உரிமையை இழந்துவிட்டவர்கள் ஆயிற்றே!

அப்படிப்பட்டவர்கள், அவசரப்படுகிருர்கள் என்பதற்காக இந்தி பேசாதோர் விட்டுக்கொடுக்கவேண்டும் என்று கேட்பது முட்டாள்தனமல்லவா!

எல்லாவற்றையும் மறந்துவிட்டு, புறக்கணித்து ஒதுக்கி வைத்துவிட்டு, தற்காலிகத் தீர்வு என்ற வகையில் ஆட்சிமொழிச் சட்டத்திருத்தத்தை ஒப்புக்கொண்டாலும், பிரதமர், அலட்சியம் செய்துவிட முடியாது என்பதன் பொருள் என்ன?

நேருவின் வாக்குறுதி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏடுகளில் இதழ்களில் பெரிய பெரிய புகைப்படத்துடன் விளம்பரப்படுத்தப்பட்ட அந்த வாக்குறுதி, அப்படியே சட்டவடிவம் பெறுமா? இந்திக்காரர்களின் எதிர்ப்புக்கு வளைந்து கொடுத்த ஒரு நகல்பிரதி சமர்ப்பிக்கப்பட்டு, அதுவே சட்டமாகுமா?

தலைவர் காமராசரது இரண்டாவது கட்டச் சுற்றுப் பயணத்துக்குப் பராக்! கூறிக்கொண்டிருப்போரும், காமராசரும் கூட இந்த ஐயப்பாட்டைப் போக்கக் கடமைப் பட்டிருக்கிருர்கள்!

வெறும் பராக்குகள் பிரச்னையைத் தீர்க்காது! தீர்க்க தரிசனம் வாய்ந்த தெளிந்த கருத்துரைகள் தேவை!

மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தின் தொடக்கத்திலேயே "அப்படிப்பட்ட பேச்சை என்னிடம் எதிர்பார்க்காதீர்கள்" என்று கூறிவிட்டவரிடம்போய், நாம் இது போன்ற தெளிந்த தீர்க்கதரிசனமான கருத்துக்களை எதிர்பார்க்கலாமா? கூடாதுதானே!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்.**

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.